நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.

நாள். 07.08.2019.

## மன்றக் கூட்ட அறிவிப்பு

2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள்.07.08.2019 ஸ்ரீ விகாரி வருடம் ஆடி 22ம் நாள் புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கீழ்கண்ட பொருட்களைப் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. பொருள் :– இந்நகராட்சி பொறியாளர் திரு.ஆர்.திருமலைவாசன் அவர்களின் ஜுன் 2019 மற்றும் ஜுலை 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

   அலுவலகக்குறிப்பு :-
   மன்றம் பதிவு செய்யலாம்.
   (ந.கஎண். 1116/2016/சி1)
   தீர்மான எண்: 693
   தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

2. பொருள் :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணை சாலையில் உள்ள ஜெயராஜ் அன்னபாக்கியம் திருமண மண்டபத்தில் கழிப்பறைகள், சமையலறையினை புதுப்பித்தல் மற்றும் இதர மராமத்து பணிகள் செய்திட இந்நகர்மன்றத் தீர்மான எண்.675 நாள்.28.06.2019ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 24.07.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணை சாலையில் உள்ள ஜெயராஜ் அன்னபாக்கியம் திருமண மண்டபத்தில் கழிப்பறைகள், சமையலறையினை புதுப்பித்தல் மற்றும் இதர மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.1.35 லட்சம் | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.13 % குறைவு | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.13 % குறைவு |
| 2. | | | N. பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர் தேனி மதிப்பீட்டு விலையை விட 9.70% அதிகம் | |

அலுவலகக்குறிப்பு :–

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1219/2019/இ1)

தீர்மான எண்: 694

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3. பொருள் :- பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.9, மயானக்கரை ரஸ்தா பகுதியில் உள்ள பிராணிகள் அறுவைச் சிகிச்சை மையக் கட்டிடத்தில் குடிநீர் வசதிகள், மின்வசதிகள் மற்றும் இதர பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது மற்றும் இந்நகராட்சி வைகை அணை சாலை பகுதியில் உள்ள உரக்கிடங்கில் E-Waste & Domestic Hazadaous Waste என்ற வகையில் தடுப்பு அமைத்து உரிய வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிக்கு 30.07.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | பெரியகுளம் நகராட்சி வடகரை மயானக்கரை ரஸ்தா பகுதியில் உள்ள பிராணிகள் அறுவை சிகிச்சை கட்டிடம் மற்றும் வைகை அணை சாலையில் உள்ள உரக்கிடங்கில் மராமத்து பணிகள் செய்தல் | ரூ.1.00 லட்சம் | திரு.S.பாலகிருஷ்ணன், தேனி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையை விட 0.16 % குறைவு | திரு.S.பாலகிருஷ்ணன், தேனி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலையை விட 0.16 % குறைவு |
| 2. | | | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 3.21 % அதிகம் | |

அலுவலக குறிப்பு :-

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.S.பாலகிருஷ்ணன், தேனி ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.களண். 1311/2019/இ1)

தீர்மான எண்: 695

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. <u>பொருள்</u> :- பெரியகுளம் நகராட்சி வடகரை பகுதியில் உள்ள வடக்கு பூந்தோட்டம் தெரு மற்றும் வைத்தியநாதபுரம் வெற்றிலை மடம் பகுதி ஆகிய இடங்களில் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண்.676 நாள்.28.06.2019ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 24.07.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | பெரியகுளம் நகராட்சி வடகரை பகுதியில் உள்ள வடக்கு பூந்தோட்டம் தெரு மற்றும் வைத்தியநாதபுரம் வெற்றிலை மடம் பகுதி ஆகிய இடங்களில் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.1.45 லட்சம் | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.12 % குறைவு | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.12 % குறைவு |
| 2. | | | N. பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர் தேனி மதிப்பீட்டு விலையை விட 2.67% அதிகம் | |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1218/2019/இ1)

தீர்மான எண்: 696

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. <u>பொருள்</u> :- மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் 02.07.2019ம் தேதியன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களுக்கும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான தென்கரை பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணிகள் செய்வதற்கு 30.07.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான தென்கரை பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணி செய்தல்</td><td rowspan="2">ரூ.2.00 லட்சம்</td><td>திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு</td><td rowspan="2">திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.A.S.காஜா முயினுதீன், ஒப்பந்ததாரர், பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.89 % அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு</u> :-

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1316/2019/இ1)

தீர்மான எண்: 697
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

6. <u>பொருள்</u> :- மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் 02.07.2019ம் தேதியன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து கட்டிடங்களுக்கும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான வடகரை பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணிகள் செய்வதற்கு 30.07.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம்</th><th>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td rowspan="2">பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான வடகரை பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணி செய்தல்</td><td rowspan="2">ரூ.2.00 லட்சம்</td><td>திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு</td><td rowspan="2">திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.A.S.காஜா முயினுதீன், ஒப்பந்ததாரர், பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.89 % அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு</u> :-

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 1315/2019/இ1)

தீர்மான எண்: 698

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.23 நாள்.27.1.2014ன்படி சிறு மற்றும் பெரு நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (UIDSSMT) புதைவடிகால் திட்டப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதைவடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. மேற்படி பணியின் ஒரு பகுதியாக இந்நகராட்சி இ.புதுக்கோட்டை கிராமம் எண்டப்புளி பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு தினசரி 4 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான அப்பகுதியில் உள்ள புல்பண்ணைக்கு விவசாய பயன்பாட்டிற்கு நீர் விடப்படுகிறது. மேலும், எஞ்சிய உபரிநீர் நந்தியார்புரம் கண்மாய் வழியாக செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பகுதியில் தாழ்வாக உள்ள தனியார்க்கு சொந்தமான திரு.ஜெயபாண்டி என்பவரின் விவசாய நிலத்திற்குள் உபரிநீர் சென்று நிலத்தில் உள்ள மரங்கள் அனைத்தும் பட்டுப்போய் விட்டதாகவும், இதனால் சுகாதாரக்கேடு ஏற்படுவதாக இந்நகராட்சிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அளித்துள்ளார்.

எனவே மேற்படி திரு.ஜெயபாண்டி என்பவரின் விவசாய நிலத்திற்குள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் செல்வதை தடுக்க வேண்டி அப்பகுதியின் வழியாக 500மீட்டர் வரை தனியாக குழாய் அமைத்து நந்தியார்புரம் கண்மாய்க்கு நீர் செல்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ள வேண்டி உரிய மதிப்பீடு தயார் செய்து மேற்படி UIDSSMT திட்டத்தின் மூலமே பணிகள் மேற்கொண்டு முடித்து தருமாறு செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கடிதம் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

1. மேற்கண்டவாறு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட உபரிநீர் அப்பகுதியில் தாழ்வாக உள்ள தனியார்க்கு சொந்தமான நிலத்திற்கு செல்லாதவாறு புதிதாக குழாய் அமைத்து நந்தியார்புரம் கண்மாய்க்கு உபரிநீர் கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை புதைவடிகால் திட்டப்பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட UIDSSMT திட்ட நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1123/2019/இ2)

தீர்மான எண்: 699
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

8. பொருள் :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் வணிக வளாக கடைகளுக்கு உரிய காலம் முடிவடைந்துவிட்டதால் மேற்படி உரிய காலத்தினை கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி நீட்டிப்பு செய்து வழங்கிட உரிமதாரர்கள் அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண். | உரிமதாரர் விபரம் மற்றும் கடை விபரம் | பழைய மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1 | U. நிஜாம்<br>தோட்டி காலனி<br>வணிகவளாகம்<br>ஏ பிளாக் கடை எண்.1<br>(2005214) | 4812/– | 5534/– | 15.06.2019 முதல்<br>14.06.2022 வரை<br>(மூன்றாவது உரிமம்) |
| 2 | L.வெங்கடேசன்<br>தோட்டி காலனி<br>வணிகவளாகம்<br>ஏ பிளாக் கடை எண்.2<br>(2005215) | 4049 /– | 4656 /– | 01.07.2019 முதல்<br>30.06.2022 வரை<br>(மூன்றாவது உரிமம்) |

அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ன்படி மேற்படி கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகள் உரிமம் நீட்டிப்பு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

மேற்காணும் கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4886/2007/அ2)

தீர்மான எண்: 700

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

9. பொருள் :– இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2019–20ம் ஆண்டிற்கான கணினி இரசீதுகள், எழுதுபொருட்கள் மற்றும் பாரங்கள், படிவங்கள், தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி லிட் நிறுவனத்திலிருந்து அச்சடித்து பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சம் (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5484/2019/பி2)

தீர்மான எண்: 701

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10. பொருள் :– பெரியகுளம் நகராட்சி தென்கரை 24வது வார்டு மாதாகோவில் வடக்கு கோவில் தெருவில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுவது தொடர்பாக திருமதி.ரபேக்காள் என்பவர் பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.11/2019 மற்றும் I.A.No.48/2019ன்படி இரண்டு வழக்குகள் தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெயபாரதி அவர்கள் ஆஜராவதற்கும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/– வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1112/2018/எப்1)

தீர்மான எண்: 702

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

11. பொருள் :- பெரியகுளம் நகராட்சி வடகரை 24வது வார்டு குமார் தெருவில் உள்ள சுவற்றின் ஆக்கிரமிப்பினை அகற்றுவது தொடர்பாக திரு.மதிவாணன் என்பவர் பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.136/2018ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெயபாரதி அவர்கள் ஆஜராவதற்கும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.6000/– வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2075/2018/எப்1)

தீர்மான எண்: 703

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

12. பொருள் :- நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.16845/2019/TP3 நாள்.16.07.2019ல் உள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள விபரப்படி, இந்நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021 கணக்கெடுப்புக்காக நகராட்சிக்குரிய தற்போதைய நிலையில் மேம்படுத்தப்பட்ட நகராட்சியின் நகர வரைபடம் (Auto cadd 300ppt) வடிவத்தில் தயார்செய்து குறுந்தகட்டில் ஒரு தொகுப்பு நகராட்சி நிர்வாக ஆணையகரத்துக்கும், ஒரு தொகுப்பு மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணைத்திற்கும் மற்றும் ஒரு தொகுப்பு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலத்திற்கும் அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வரைபடம் தயார் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4500/—க்கு மன்றப்பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :—

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1371/2019/எப்1)

தீர்மான எண்: 704

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

13. பொருள் :- தேனி மாவட்டம் பெரியகுளம் தாலுகா பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நகர் ஊரமைப்பு பிரிவு அபிவிருத்தி திட்டம் TP/D.T.P-142/1968 தேதி: 29.11.1968ல் என்ற திட்டத்தினை 1968ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டு இது நாள் வரையிலும் நடைமுறையில் உள்ளது. மேற்படி அனுமதி வழங்கப்பட்ட அபிவிருத்தி திட்டப் பகுதியில் தற்பொழுதைய நிலையில் பிளாக் —40 T.S.No.4628/3, 4628/1A, 4625/1, 4624/1, 4627/1 என்ற நகர அளவு எண்களில் தற்போதைய நிலையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அனுமதியற்ற மனைகள் உருவாகியும் கட்டிடங்களாகவும் உள்ளது. தற்போது இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மேற்படி உத்தேசிக்கப்பட்ட திட்டச் சாலையினை நீக்கம் செய்வது தொடர்பாக மனு செய்துள்ளனர். மேற்படி மனுக்களை பரிசீலனை செய்து இடம் ஆய்வு செய்ததின்படி மேற்படி அங்கீரிக்கப்பட்ட பிரிவு அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடபட்ட D, D1, A உள்ள 50' அடி உத்தேச திட்டச்சாலை பகுதியில் அதிக குடியிருப்பு கட்டிடங்கள் அமைந்துள்ளது. மேற்படி உத்தேசிக்கப்பட்ட திட்ட சாலையானது 1968ம் ஆண்டிலிருந்து இது வரையிலும் நில ஆர்ஜிதம் எதுவும் செய்யப்படவில்லை. எனவே தற்போது மேற்படி திட்டச் சாலைகளை இடத்தினை நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைப்பதற்கு வழிவகை இல்லாத சூழல் உள்ளதாலும் பொதுமக்களின் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டி உள்ளதாலும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட திட்ட சாலையினை நீக்கம் செய்து தற்போதைய நிலைக்கு தகுந்தவாறு அபிவிருத்தி திட்டம் தயாரித்து அனுமதி பெறுவது தொடர்பாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :—

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1372/2019/எப்1)

தீர்மான எண்: 705

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

14. பொருள் :— தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2172/2019/ஊ.வ.7, நாள்.06.2019ல் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பெரியகுளம் நகராட்சி வடகரை மற்றும் தென்கரையில் உள்ள மக்களிடையே வீடுகள் மற்றும் கடைகள், வணிகவளாகங்கள், அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க துண்டு பிரசுரம், ஸ்டிக்கர் மற்றும் பேனர் வைத்து விழிப்புணர்வு ஏற்பாடு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 லட்சம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1241/2019/இ2)

தீர்மான எண்: 706

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

15. பொருள் :– இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண். TN60A3022 (மினி லாரி) தகுதிச்சான்று (F.C) 2019ம் ஆண்டிற்கு முடிவடைவதால், 2019–20ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு தேவையான பழுதுபணிகளை சரிசெய்ய தேவையான உத்தேச செலவினம் தொகை ரூ.85,000/–(ரூபாய் என்பத்து ஐந்தாயிரம் மட்டும்) ஆகும் என ஓட்டுநர் தெரிவித்துள்ளார். மேற்படி வாகனத்தில் ஓட்டுநர் தெரிவித்துள்ள பழுது பணிகளை மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், கம்பம் ரோடு, பெரியகுளம் மூலமாக பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2904/2016/எச்1)

தீர்மான எண்: 707

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

16. பொருள் :– இந்நகராட்சிக்கு சொந்தமான TN60AA6284 ஜே.சி.பி.வாகனம் 2000 மணி நேரத்திற்கும் மேலாக இயக்கப்பட்டுள்ளமையால் வாகனத்தில் ஹைட்ராலிக் ஆயில், இன்ஜின் ஆயில், ஆக்சில் ஆயில், பில்டர் கிட், கேஸ்கட், ஸ்டெப்லேசர் வியர் பேடு கிட், பில்டர் மாற்றம் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சி, பெரியகுளம் நிறுவனத்தில் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.62000/– (ரூபாய் அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.757/2017/எச்1)

தீர்மான எண்: 708

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

17. பொருள் :– திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் (Animators) மூலம் வீடுதோறும் விழிப்புணர்வு அறிவிப்புகள் **(Notice)** வழங்குவதற்கு Color Print 10000 எண்ணங்கள் மற்றும் Black & White Print 10000 எண்ணங்கள் அச்சடித்து வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.655/2015/எச்1)

தீர்மான எண்: 709

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ரா. கமலா
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்(பொ)
பெரியகுளம் நகராட்சி